**செய்தி வெளியீடு எண்: 114/2023** **நாள்: 18.10.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை, கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் இணைப்பு பால தூணில் அமர்ந்திருந்த மனநலம் பாதிக்கப்பட்ட நபரை தீயணைப்பு வீரர்கள் பத்திரமாக மீட்டனர்**

கோயம்பேடு மெட்ரோ தூண் மற்றும் இணைப்பு பாலத்திற்கு மேலே யாரும் போகமுடியாத நிலையில் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் யாருக்கும் தெரியாத ஒரு இடைவெளியில் புகுந்து அமர்ந்திருந்தார். இதை கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தின் பாதுகாவலர் கண்டறிந்தார். உடனடியாக அவரை கீழே இறங்க சொல்லி அழைத்தும் அவரிடம் இருந்து எவ்வித பதிலும் வரவில்லை. இந்நிலையில், அவர் மனநலம் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம் என்று அங்குள்ளவர்கள் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டாளர் காவல் துறைக்கும், தீயணைப்பு துறைக்கும் தகவல் தெரிவித்தார்.

பின்னர், காவல் துறை மற்றும் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். தீயணைப்பு துறையினர் அந்த நபரை இறங்க சொல்லியும் அவரிடம் இருந்து எவ்வித பதிலும் வரவில்லை. இந்நிலையில் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலைய நகரும் படிகட்டுகள் அருகில் இருந்து ஒரு சிறிய இடைவெளியை பயன்படுத்தி மனநலம் பாதிக்கபட்ட நபரை தீயணைப்பு துறையினர் பத்திரமாக மீட்டனர். மீட்கப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்ட நபரை K11 காவல் நிலைய ஆய்வாளர் விசாரனைக்கு அழைத்து சென்றார்.

இந்நிகழ்வு தொடர்பாக, சில ஊடகங்கள் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலைய நகரும் படிக்கட்டில் தவறி விழுந்து இந்த நபர் சிக்கிகொண்டார் என்று தவறான தகவலை வெளியிட்டுள்ளனர்.

கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலைய நகரும் படிக்கட்டுகள் அருகில் உள்ள பாதையில் தவறாக விழுந்து அவர் சிக்கிகொள்ளவில்லை என்பதை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துக்கொள்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**